வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 19.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், அறிவுத் திறனுக்கு முக்கிய பங்கு இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சிக்கில் செல் இரத்த சோகை நோயின் சவால்களை சமாளிப்பதில், தொழில் நுட்பத்தின் ஆற்றலை அரசு பயன்படுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று புதுடெல்லியில் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதல் சுற்று ஆலோசனைகளில் ஈடுபட்டார்.

தமிழ்நாடு-புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், அனைத்து கடல்சார் பாதுகாப்பு அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2 நாள் சாகர் கவச் ஒத்திகைப் பயிற்சி இன்று தொடங்கி உள்ளது.

மோடி-பீகார்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம் ராஜ்கீரில், நாளந்தா பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே உரையாற்றினார். 2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், அறிவுத் திறனுக்கு முக்கிய பங்கு இருக்கும் என்று அவர் தெரிவித்தார். கல்வி மற்றும் அறிவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமாகவே இந்தியா வல்லரசு நாடாக மேம்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

ராஜ்கீரில், நாளந்தா பல்கலைக் கழகத்தின் புதிய வளாகத்தை, பிரதமர் திறந்து வைத்தார். இந்திய பாரம்பரியம் மற்றும் தனித்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டே, நாளந்தா பல்கலைக் கழகம் என்றும், நாளந்தா பல்கலைக் கழகம் புதுப்பிக்கப்படுவது, எழுச்சிமிகு இந்தியாவின் வல்லமைக்கு சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய பாரம்பரிய மரபுகளின் படி, வளர்ச்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டுக்கும் அரசு முக்கியத் துவம் அளித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். இம்முயற்சிகளின் சர்வதேச அளவிலான நீட்டிப்பே, உலக சோலார் கூட்டணி என்றும் உலகின் மிகப் பெரிய அறிவுக்

கேந்திரமாக இந்தியாவை மீண்டும் நிலை நிறுத்துவதே அரசின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கற்றல் என்னும் புதிய பாலத்தின் மூலம் உலக நாடுகளுடன் இந்தியா இணைந்து வருவதாகவும், இதன் மூலம் கடந்த காலங்களை விட வலுவான உறவுகளை கட்டமைக்க முடியும் என்றும் கூறினார்.

பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார்,மற்றும், இந்தியாவிற்கான 17 நாடுகளின் தூதர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உலக மரபுச் சின்னங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ள, பண்டைய நாளந்தா பல்கலைக் கழகத்தின் எஞ்சிய பகுதிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி, முன்னதாக நேரில் பார்வையிட்டார்.

*மோடி-யோகா*

10-ஆவது சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சசாங்காசனம் பற்றிய காணொளி ஒன்றை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். சசாங்காசனம் செய்ய வேண்டிய முறை குறித்தும் சசாங்காசனம் செய்வதால், மலச்சிக்கல், முதுகுவலி கோபம் மற்றும் பதற்றம் குறைவது குறித்தும், இக்காணொளியில் எடுத்துக்

கூறப்பட்டுள்ளது. உயர் இரத்த அழுத்தம் மற்றும் மூட்டு அழற்சி உள்ளவர்கள் சசாங்காசனம் செய்வதில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் அல்லது தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*தன்கர்*

இந்தியாவின் பொருளாதாரத்தில் பழங்குடி சமூகத்தினர் பெருமளவில் பங்களிப்பதாக, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். உலக சிக்கில் செல் இரத்த சோகை தினத்தை ஒட்டி, மத்திய பிரதேஷ் மாநிலம் டிண்டோரியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். 2047-ல் விடுதலையின் நூற்றாண்டைக் கொண்டாடும் போது, சிக்கில் செல் இரத்த சோகை நோயில் இருந்து, நாடு முழுமையாக விடுபட்டு இருக்க வேண்டும் என்பதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணம் என்றும் இதற்காகவே சிக்கில் செல் நோய்க்கான சிகிச்சை, ஆயுஷ்மான் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்திய அரசியல் சாசனத்தில் பழங்குடி சமூகத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகைகளை நிறைவேற்ற, கடந்த 10 ஆண்டுகளில் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாகவும் அவர் கூறினார். குடியரசுத் துணைத் தலைவர் மாளிகையில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும்

என்றும், டிண்டோரி பகுதியின் பிரத்யேகத் தாவரங்களுக்கு இத்தோட்டத்தில் சிறப்பிடம்அளிக்கப்படும் என்றும் திரு ஜெகதீப் தன்கர் தெரிவித்தார். மத்திய பிரதேஷ் ஆளுநர் திரு மங்குபாய் பட்டேல் முதலமைச்சர் திரு மோகன் யாதவ் மற்றும் மாநில அமைச்சர்கள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சிக்கில் செல்-மோடி

சிக்கில் செல் அனிமியா என்னும் இரத்த சோகை நோயின் சவால்களை சமாளிப்பதில், தொழில் நுட்பத்தின் ஆற்றலை அரசு பயன்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். உலக சிக்கில் செல் இரத்த சோகை தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் இன்று வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறி உள்ளார். தேசிய அளவில் சிக்கில் செல் இரத்த சோகை ஒழிப்பிற்கான இயக்கம் ஒன்றை அரசு தொடக்கி இருப்பதாகவும், விழிப்புணர்வு, நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை உட்பட எல்லா அம்சங்களுக்கும் இந்த இயக்கத்தில் முக்கியத் துவம் அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டாவும் சிக்கில் செல் இரத்த சோகை தினத்தை ஒட்டி, செய்தி வெளியிட்டுள்ளார்.

*பழங்குடியினர்*

சிக்கில் செல் அனிமியா என்னும் இரத்த சோகை நோய் பழங்குடி மக்களுக்கு மட்டுமே ஏற்படுவதாக கூறப்படுவது, தவறான கருத்து என்று மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஜூயல் ஓராம் கூறி உள்ளார். இந்நோய் குறித்து புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சிக்கில் செல் இரத்த சோகை, எவரை வேண்டுமானாலும் பாதிக்கலாம் என்றும், இந்நோயை கண்டுபிடிக்க, கிராம பஞ்சாயத்து மற்றும் அங்கன்வாடி நிலையில் கள ஆய்வுகள் அவசியம் என்றும் கூறினார். இப்பணிகளில் உள்ள சவால்கள் குறித்து தனிப்பட்ட துறைகள் மற்றும் அமைச்சகங்களுக்கு முழுமையாகத் தெரியாது என்பதால், ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

*நிர்மலா*

மத்திய நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று புதுடெல்லியில் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதல் சுற்று ஆலோசனைகளில் ஈடுபட்டார். நிதிதுறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, தலைமை பொருளாதார ஆலோசகர், மற்றும், நிதி-வருவாய் உள்ளிட்ட துறைகளுக்கான அரசுச் செயலர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*பாஸ்வான்*

உணவு தொழில் நுட்பம் தொடர்பான தேசிய மேலாண்மை மற்றும் தொழில் முனைவு கழகங்கள், நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சீராக் பாஸ்வான் கூறி உள்ளார். வரும் செப்டம்பர் மாதம் தலைநகரில் நடைபெற உள்ள இந்தியா உலக உணவு மாநாடு குறித்து, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

உணவு பதனீட்டு துறையில், வளர்ச்சிக்கு பெரும் வாய்ப்புகள் இருப்பதாக தெரிவித்த அவர், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதிலும், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதிலும் இத்துறை முக்கிய பங்காற்ற முடியும் என்றார். உணவு பதனீட்டுத் துறை மூலம் கணிசமான எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். உள்ளூர் அளவிலான உணவுப் பொருட்களை உள்ளூர் அளவிலேயே பதனீடு செய்வதற்கான வசதிகளை,நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருவாக்குதல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். பதனீட்டு வசதிகள் போதிய அளவில் இல்லாததே, காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர உணவுப் பொருட்கள் பெருமளவில் வீணாக காரணம் என்றும் அடுத்த 5 ஆண்டுகளில் இந்நிலையை மாற்ற

தாம் பாடுபடப் போவதாகவும் அமைச்சர் கூறினார். இந்தியாவில் பதனீடு செய்யப்படும் உணவுப் பொருட்கள், உலக அளவிலான தரம் மற்றும் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றதாக அமைவதை அரசு உறுதிபடுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு பதப்படுத்துதல் துறை இணை அமைச்சர் திரு ரவ்நீத் சிங் பிட்டு இந்நிகழ்ச்சியில் பேசுகையில் இந்திய பதனீட்டு உணவுகளின் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். இந்திய உணவுகளுக்கு உலகெங்கிலும் வரவேற்பு இருப்பதால் உணவு பதனீட்டு துறையை மேலும் வலுப்படுத்துதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் வளமான உணவு கலாச்சாரத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதன் மூலம் உணவு பதனீட்டுத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் இந்தியா உலக உணவு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது. உலகெங்கிலும் இருந்து உணவு பதனீட்டு துறையினர் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

*தமிழ்நாடு சட்டமன்றம்*

தமிழ்நாடு சட்டமன்றத்தின் கூட்டத் தொடர் நாளை தொடங்க உள்ளது. காலை-மாலை இரு அமர்வுகளாக, வரும் 29-ஆம் தேதி வரை நடைபெறும் இக்கூட்டத் தொடரில், துறை வாரியான மானியக்

கோரிக்கைகள் மீது விவாதங்கள் இடம் பெற உள்ளன. புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புகளும், இக்கூட்டத் தொடரில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சாகர் கவச்*

தீவிரவாதிகளின் கடல் வழி ஊடுறுவலை தடுக்கும் வகையில், சென்னை முதல் குமரி வரையிலான கடலோரப் பகுதிகளில், அனைத்து கடல்சார் பாதுகாப்பு அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2 நாள் சாகர் கவச் ஒத்திகைப் பயிற்சியின் முதல் நாளான இன்று புதுச்சேரி கடல் பகுதியில், மீன்பிடி படகு மூலம், தொலைநோக்கு கருவிகளைக் கொண்டு, பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. கடலோர காவல் துறை கண்காணிப்பாளர் திரு பழனிவேல், ஆய்வாளர் திரு வேலய்யன் ஆகியோர் இதற்கு தலைமை ஏற்றனர். சந்தேகத்திற்கு இடமான நபர்கள், படகுகள், மற்றும், கப்பல்களின் நடமாட்டம் தென்பட்டால் உடனடியாக கடலோரக் காவல் துறையிடம் தெரிவிக்குமாறு, காலாப்பட்டு, வீராம்பட்டடினம் உள்ளிட்ட 16 கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

*விடுமுறை*

காரைக்கால் மாங்கனி திருவிழாவை ஒட்டி, காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு

அலுவலகங்களுக்கும் வரும் 21-ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவித்து துணை நிலை ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். இதற்கு பதிலாக வரும் 29-ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*வானிலை*

தென்னிந்தியப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் வேலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக் குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வரும் 25-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரம், மற்றும், தெற்கு-மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 23-ஆம் தேதி வரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

கிரிக்கெட்

உலக கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் சூப்பர்-8 சுற்றுப் போட்டிகள் இன்று தொடங்குகின்றன. இன்று இரவு 8 மணிக்கு அமெரிக்க அணி, தென்னாப்பிரிக்க அணியுடன் மோதுகிறது. இண்டியா-ஆப்கானிஸ்தான் இடையிலான போட்டி, பார்படோசில் நாளை நடைபெற உள்ளது.

விக்கிரவாண்டி

தமிழகத்தின் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் திமுக வேட்பாளர் திரு அன்னியூர் சிவா இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். விக்கிரவாண்டி உட்பட, 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 தொகுதிகளுக்கு, ஜூலை 10-ஆம் தேதி நடைபெற உள்ள இடைத் தேர்தலில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய, நாளை மறுநாள் கடைசி நாளாகும். வேட்புமனு பரிசீலனை வரும் திங்கட்கிழமை நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள, வரும் 26-ம் தேதி கடைசி நாளாகும். ஜூலை 10-ஆம் தேதி இடைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள், ஜூலை 13-ஆம் தேதி எண்ணப்படும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், அறிவுத் திறனுக்கு முக்கிய பங்கு இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சிக்கில் செல் இரத்த சோகை நோயின் சவால்களை சமாளிப்பதில், தொழில் நுட்பத்தின் ஆற்றலை அரசு பயன்படுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று புதுடெல்லியில் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன், பட்ஜெட்டிற்கு முந்தைய முதல் சுற்று ஆலோசனைகளில் ஈடுபட்டார்.

தமிழ்நாடு-புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், அனைத்து கடல்சார் பாதுகாப்பு அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2 நாள் சாகர் கவச் ஒத்திகைப் பயிற்சி இன்று தொடங்கி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------

*சுரேஷ் கோபி (12)*

மத்திய பெட்ரோலியத் துறை மற்றும் சுற்றுலாத் துறை இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபி, பெங்களூரில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் சோம்நாத்தை சந்தித்துப் பேசினார். கேரளத்தில் இடுக்கி மற்றும் முல்லைப் பெரியாறு அணைகளின் வெள்ள அபாயத்தை பகுப்பாய்வு செய்வதில் விண்வெளி தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது, இத்தகைய ஆய்விற்கு தேவையான, தரைப் பரப்பின்

துல்லியமான செயற்கை கோள் படங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் வழங்கும் என்று திரு சோம் நாத் உறுதி அளித்தார். வெள்ள அபாயத்தை கணிப்பதிலும், உதவி-மீட்புப் பணிகளை திட்டமிடுவதிலும் செயற்கைக்கோள் தொலைத் தொடர்புத் திறன்களை எப்படி பயன்படுத்தலாம் என்பதையும், இஸ்ரோ தலைவர் அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.